நாள்: 11.08.2026 SC. 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியன் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 16 | | | |

---

முதல் விசாரணை

நான் தற்போது கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.03.2022ம் தேதி கூடலூர் வடக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது கம்பம் அரசு மருத்துவமனையில் இருந்து 20.40மணிக்கு வந்த தகவலின் அடிப்படையில் 21 மணிக்கு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கூடலூர், வார்டு-4, சுக்காங்கல்பட்டியைச் சேர்ந்த ராஜா த/பெ துரைச்சாமி, அரவிந்த் த/பெ ராஜா, ஆகியோர்களை விசாரித்து அரவிந்திடம் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின் கூடலூர் வடக்கு காவல் நிலையம் வந்து, புகாரின் தன்மைக்கு ஏற்ப கூடலூர் வடக்க காவல் நிலைய குற்ற எண். 61/22 ன் கீழ் சட்டப்பிரிவு 294b, 452, 323, 324, 307 இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும், வழக்கு விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் மேல் விசாரணைக்காக முதல் தகவல் அறிக்கையை சமர்ப்பித்தேன். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

கூடலூர் வடக்கு காவல் நிலையத்திலிருந்து கம்பம் அரசு மருத்துவமனை செல்வதற்கு 10 நிமிடம் ஆகும். தகவல் கிடைத்தவுடன் மருத்துவமனைக்கு நான் மட்டும் தான் சென்றேன். நான் காயம் பட்ட அரவிந்தன் வாக்குமூலம் கொடுக்கும் நிலையில் இருந்தாரா என மருத்துவரிடம் சான்று வாங்கினேனா என்றால் அவர் நான் விசாரிக்கும்போது நல்ல மனநிலையில் என்னிடம் பேசினார். நான் நேரடியாக விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன். நான் வாக்ககுமூலம் வாங்கும்போது அரவிந்த் தந்தை ராஜா அருகில் உள்ள படுக்கையில் மருத்துவசிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். தூரத்தில் அவர் உறவினர் ஒருவர் இருந்தார். வாக்குமூலத்தை அரவிந்த் சொல்ல சொல்ல நான் தான் எழுதினேன். நான் வாக்குமூலத்தை படித்து காட்டும்போது ராஜா அருகில் இல்லை. அரவிந்த் மட்டும் தான் இருந்தார். புகார் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன் என தனியாக மேல்குறிப்பு செய்துள்ளேனா என்றால் இல்லை. புகாரை பெற்று நான் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் சாட்சியாக யாரும் கையெழுத்து போடவில்லை. புகாரில் தேதி, இடம் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். ஆனால் நான் எழுதவில்லை. முதல் தகவல் அறிக்கையில் column எண்.14 ல்

புகார்தாரர் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். column எண்.15ல் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்ட நாள் 01.03.2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை column எண்.3 bல் 22.15 என காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்த நேரம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் சுமார் 50 நிமிடங்களுக்கு மேலாக அரவிந்தை விசாரித்து வாங்கினேன். அப்போது அரவிந்தன் கம்பம் அரசு மருத்துவமனையில் படுக்கையில் இருந்தார். முதல் தகவல் அறிக்கை column எண்.3 cல் பொது நாட்குறிப்பு பதிவு நேரம், நாள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக புகார் வாக்குமூலம் வாங்கும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகளை பின்பற்றாமல் புகார் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் கம்பம் அரசு மருததுவமனை சென்று வாங்கவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை குறிபிட்ட தேதியில் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை எந்த நேரத்தில், புலன் ஆய்வு அதிகாரியிடம் சமர்பித்தேன் என்பதை சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவசர கதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்குக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.11 12:45:38 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்